# ஊழியரணியில் சேர மக்களுக்கு உதவும் சுற்றுலா நிறுவனம்



(படம்: ஹார்ட் டிராவல்)

படத்தில் (இடமிருந்து) : ஹார்ட் டிராவல் நிறுவனத்தில் புதிய திறன்களைக் கற்றுக்கொண்டு வரும் சுஷில் ராய், விஜி, ரேச்சல், மற்றும் அவர்களுக்குச் சுற்றுலா நிறுவனத்தின் பணிகளைக் கற்றுக்கொடுக்கும் ஆட்ரே, ஜோயி.

சிங்கப்பூரில் ஊழியர் அணியில் மீண்டும் இணைய விரும்பும் மக்களுக்கு ஒரு பாலமாக அமைந்து அரும்பணி ஆற்றுகிறது ஒரு சுற்றுலா நிறுவனம்.

வசதி குறைந்தவர்கள், குறைந்த வருமானம் ஈட்டுவோர், குறைந்த கல்வி பெற்றவர்கள், உடற்குறை உள்ளவர்கள், இல்லத்தரசிகள், முன்னாள் கைதிகள், வேலை கிடைக்காத நடுத்தர வயதுடையோர், மூத்த குடிமக்கள் என அனைத்து பிரிவினருக்கும் உதவிக் கரம் நீட்டுகிறது ஹார்ட் டிராவல் நிறுவனம்.

டெக் கீ சமூக மன்றத்தில் தலைமை அலுவலகத்தைக் கொண்டுள்ள இந்த நிறுவனத்தின் தலைமை நிர்வாகி திரு சேம்சன் டான், "எங்கள் நிறுவனத்தில் ஊழியர்களுக்குச் சுற்றுலாத்துறை தொடர்பான பணிகள் கற்றுக் கொடுக்கப்படும்.

"சுமார் ஆறு மாதப் பயிற்சிக்குப் பிறகு, அவர்களின் ஆற்றல்கள் வளர்ந்தவுடன், சுற்றுலாத் தொடர்பான மற்ற நிறுவனங்களில் அவர்கள் புதிய வேலைகளைத் தேடலாம் அல்லது எங்கள் நிறுவனத்திலேயே பணியாற்றலாம்," என்று தமிழ் முரசிடம் கூறினார்.

இதன் மூலம் அவர்கள் புதிய திறன்களைக் கற்றுக் கொள்கிறார்கள். நல்ல சம்பளமும் அவர்களுக்குக் கிடைக்கும்.

ஹார்ட் டிராவல் நிறுவனத்தில் நிரந்தரமாக இருக்க விரும்புவோர் சுற்றுலாப் பயிற்சிகள், அனைத்துலக ஆகாயப் போக்குவரத்துச் சங்கத்தின் பயிற்சிகள் போன்ற சுய மேம்பாட்டுப் பயிற்சிகளுக்கு அனுப்பப்படுவார்கள் என்றார் திரு டான்.

பெரிய பேரங்காடியில் அல்லாமல் தமது அலுவலகத்தை ஒரு சமூக மன்றத்தில் அமைத்திருக்கும் திரு டான், அதன் மூலம் வீடமைப்புப் பேட்டை மக்களுடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளமுடிகிறது என்றார்.

தங்கள் சுற்றுலாக்களில் மக்கள் பதிந்து கொள்வதன் மூலமும் தங்கள் நிறுவன ஊழியர்களுக்கு உதவமுடியும் என்றார்.

‘நான் ஆரோக்கியமாக இருந்தாலும் என்னால் நிரந்தர வேலையில் அமர முடியவில்லை. எனக்கு ஹார்ட் டிராவல் வாய்ப்பு அளித்தது. சுற்றுலா ஆலோசகர் என்ற முறையில் நான் நிறைய கற்று வருகிறேன்.’

**- ஹார்ட் டிராவல் நிறுவனத்தில் மறுவாழ்வு பெற்ற விஜி (50).**